00002

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 5

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 01 – 2022/2023

**LLU 5810**– காணிச் சட்டம்

காலம்: ஒரு (01) மணித்தியாலம்

திகதி:- 22.09.2023 நேரம்: பி.ப. 03.30 - பி.ப 04.30

ஒரு (01) வினாவிற்கு மட்டும் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. " உரிமையாளர் ஒருவரது உரிமைகள் ஆனவை மூன்று விடயங்களால் ஆக்கப்பட்டுள்ளன. அவையாவன, (அ) உடைமைக்கான உரிமை மற்றும் உடைமையை மீட்பதற்கான உரிமை, (ஆ) பாவனை செய்வதற்கும் அனுபவிப்பதற்குமான உரிமை, மற்றும் (இ) கைமாற்றுவதற்கான உரிமை"

Sir AFS Massdrop, The *Institutes of Cape Law* (JC Juta & Company, 1907

மேற்குறிப்பிட்ட கூற்றின் பின்னணியில் இலங்கையில் சொத்துவத்தை (Owner ship) மட்டுப்படுத்தும் நியதிச்சட்ட உறுப்புரைகளை ஆராய்க.

உமது விடையை பொருத்தமான சான்றுகளால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

2. ரம்யா என்பவள் கொழும்பில் பெரிய தோட்டம் ஒன்றுடன் அழகிய வீடொன்றை வாடகைக்கு அமர்த்தினாள். வாடகை வீட்டில் ரம்யா வசித்த காலப்பகுதியில், சில திருத்தங்களை பின்வருவனவற்றை உள்ளடக்கி தோட்டத்தில் மேற்கொண்டாள்:

(அ) ஒரு எரிவாயு அடுப்புடனான வெளிப்புற சமையலறை
(ஆ) திறந்தவெளியின் தரையுடன் இணைக்கப்பட்ட ஒரு பாரம்பரிய மர ஊஞ்சல்
(இ) முன் தாழ்வாரத்தின் மரத்தூண்களிற்கு ஆணியால் இணைக்கப்பட்ட அலங்கார விளக்கு
(ஈ) பிளாஸ்திக் சாடிகளில் நடப்பட்ட பல்வேறு வகையான அலங்கார மலர்கள்

ரம்யா வாடகைக் காலத்தை முடிவுறுத்தி அவுஸ்திரேலியாவில் குடியேற எண்ணுகிறாள். எவ்வாறாயினும், தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் எவை ஆதனத்துடன் எஞ்சியிருத்தல் வேண்டும் என்பது குறித்து அவள் நிச்சயமற்று இருக்கிறாள்.

ரம்யாவிற்கு அறிவுறுத்துக.

உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -